# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8069878

C

1. District : Kanchipuram PS: V&AC Year: 2021 FIR No.: 04/AC/2021/KM Date: 04.03.2021
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 02.03.21 Date to : நாள் வரை at 14.30 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 03.03.21 Time to : நேரம் வரை at 12.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.03.2021 Time நேரம் 15.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.03.2021 Time நேரம் 1500 hrs & 1600 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் East About 55KM
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Otteri police station, Chengalpattu District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A.Umarsaleem (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Abdul Raheem
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 4/2/2021 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Car Driver (g) Address : முகவரி No.6, Kuthanur, Guduvancheri Chengalpattu District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Kumar, Inspector of police. Otteri police station, Chengalpattu District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

Seen, 8/3/21 (signature)

Seen 8/3/21 (signature)

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded . Rs. 10,000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Nil -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Nil -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பபடுவது இன்று 04.03.2021 தேதி.
மாலை சுமார் 15.00 மணியளவில் காஞ்சிபுரம் ஊழல்
தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல்
ஆய்வாளர் ஆகிய நான் அலுவலில் இருந்தபோது திரு.
A. உமர் அலி வயது 42 த/பெ அப்துல் ரஹீம். எண்.6
செந்தில் நகர் சென்னை மணிமங்கலம், செங்கல்பட்டு
மாவட்டம் என்பவர் 04.03.2021-ம் தேதியிட்ட
எழுத்து மூலமாக வழங்கிய புகார் மனுவின் மீது உயர்
அதிகாரியின் அனுமதியுடன் நேரடி விசாரணை
ரகசியமாக மேற்கொண்டேன் அந்த மனுவின் சாராம்சம்
பின்வருமாறு. (இத்துடன் நகல் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G. Annadurai Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC Kanchipuram on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

F.A. 2 பெற்றேன் 04-03-2021 G. A. [signature] 04/03/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 05.03.2021 09.50 hrs.

Name: பெயர் G. ANNADURAI
Rank: நிலை Inspector, V&AC Kanchipuram. No. எண்

**Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.04/AC/2021/KM, U/s** 7 of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 **continues . . .)**

அனுப்புநர். A.உமர்சலீம், வயது-42, த/பெ. அப்துல் ரஉறீம், எண்.6, செந்தில் நகர், குத்தனூர், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம். நாள் 04.03.2021 பெறுநர். காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, ராகவேந்திரா நகர், காஞ்சிபுரம். ஐயா, நான் மேற்படி விலாசத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என் மனைவி பெயர் திருமதி.சமீம் பாத்திமா எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். கடந்த 2017-ம் வருடம் TN 19 AF 3381 என்ற Toyota Etios- என்ற புதிய காரை Toyota பைனான்ஸ் மூலமாக என் மனைவி திருமதி.சமீம் பாத்திமா பெயரில் சொந்தமாக வாங்கி அதனை சென்னை OLA Call Taxi-ல் இணைத்து நானே சொந்தமாக ஓட்டி வந்தேன். கடந்த 26.02.2021-ம் தேதி கோயம்பாக்கத்திலிருந்து பயணிகளை அழைத்துக் கொண்டு மாலை சுமார் 06.00 மணியளவில் வண்டலூரில் இறக்கிவிட்டு அங்கிருந்து சென்னை நோக்கி GST சாலையில் இரணியம்மன் கோவில் அருகில் சுமார் மாலை 06.30 மணிக்கு வந்து கொண்டிருந்தபோது வயது முதிர்ந்த பெண் ஒருவர் என் கார் வருவதை கவனிக்காமல் திடீரென சாலையை கடந்தார். அதனால் என்கார் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதனால் உடனடியாக நான் ஓட்டிய காருடன் அருகில் இருந்த ஓட்டேரி காவல் நிலையத்திற்கு சென்று காவல் நிலையத்தில் விபத்து நடந்ததை சொல்லி சரண்டர் ஆனேன். அங்கு பணியிலிருந்த போலீஸார் காவல் நிலையத்தின் உள்ளே என்னை அமரச் சொன்னார்கள். விபத்து நடந்த விவரத்தை என் தம்பி திரு.ஷாஜகான் என்பவருக்கு தெரிவித்தவுடன் அவர் சிறிது நேரத்தில் ஓட்டேரி காவல் நிலையம் வந்தார். மேற்படி விபத்தில் காயமடைந்தது இரண்டு வயதான பெண்கள் என்றும் அதில் ஒருவர் இறந்து விட்டதாகவும், மற்றொருவர் பலத்த காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் காவல் உதவி ஆய்வாளர் திரு.பிரதாப் சந்திரன் அவர்கள் எங்களிடம் தெரிவித்தார். அதன் பிறகு இரவு சுமார் 11.00 மணியளவில் என்னை என் தம்பியுடன் மீண்டும் நாளை காலையில் காவல் நிலையம் வரவேண்டும் என்று கூறி விபத்துக்குள்ளான என்னுடைய காரை மட்டும் காவல் நிலையத்தின் வெளியே நிறுத்தி வைத்துவிட்டு என்னுடைய காரின் RC Book-ஐ வாங்கிக் வைத்துக் கொண்டு செல்லுமாறு தெரிவித்தனர். பின்பு மறுநாள் 27.02.2021-ந் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் என்னுடைய தம்பி திரு.ஷாஜகான் உடன் ஓட்டேரி காவல் நிலையம் சென்று அங்கு பணியிலிருந்த உதவி ஆய்வாளர் திரு.பிரதாப் சந்திரன் அவர்களை பார்த்தோம். அவர் எங்களை காவல் நிலையத்திற்கு வெளியில் காத்திருக்குமாறு கூறினார். பின்பு மாலை சுமார்

**Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.04/AC/2021/KM, U/s** 7 of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 **continues . . .)**

04.00 மணியளவில் மேற்படி உதவி ஆய்வாளர் எங்களை அழைத்து மீண்டும் நாளை காலை காவல் நிலையம் வருமாறு கூறி அனுப்பிவிட்டார். மறு நாள் 28.02.2021-ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நாங்கள் இருவரும் ஓட்டேரி காவல் நிலையம் சென்று மேற்படி உதவி ஆய்வாளரை பார்த்தபோது அவர் மேற்படி விபத்து குறித்து தான் FIR போட்டுள்ளதாகவும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஆய்வாளர் திரு.குமார் என்றும் அவர் தற்போது விடுமுறையில் உள்ளதாகவும் நாளை காலை தான் பணிக்கு வருவார் என்றும் அதனால் எங்களை நாளை காலை வந்து ஆய்வாளரை பார்க்குமாறும் அவரை ஏதாவது கவனிக்க வேண்டியிருக்கும் என்று கூறி அனுப்பிவிட்டார். பின்பு மீண்டும் கடந்த 01.03.2021-ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நானும் என் தம்பியும் ஓட்டேரி காவல் நிலையம் சென்று ஆய்வாளரை பார்க்க காத்திருந்து பகல் சுமார் 01.30 மணியளவில் ஆய்வாளர் திரு.குமார் அவர்களை பார்த்து விபத்து நடந்த விவரத்தை தெரிவித்து தன்னுடைய வாகனத்தை விடுவிக்குமாறு கேட்டேன். அப்போது ஆய்வாளர் திரு.குமார் அவர்கள் எங்களிடம் காவல் நிலையத்தில் இருந்த ரிட்டையர்டு SI-யை காண்பித்து அவரை பார்க்குமாறும் அவர் கூறும் பார்மாலிடீஸை முடித்து விடுங்கள் என கூறினார். ஆனால் அந்த ரிட்டையர்டு SI எங்களிடம் எந்த விவரமும் தெரிவிக்காமல் எங்களை காத்திருக்க செய்து மீண்டும் நாளை காலை வந்து காவல் ஆய்வாளரை பார்க்குமாறு கூறி அனுப்பிவிட்டார். அதன்படி மீண்டும் 02.03.2021-ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நானும் என்னுடைய தம்பியும் காவல் நிலையம் சென்று ஆய்வாளரை பார்க்க காத்திருந்து பகல் சுமார் 02.30 மணியளவில் ஆய்வாளரை பார்த்த போது என்னை கைது செய்து Bail-ல் விடுவதற்கும், விபத்துக்குள்ளான என்னுடைய மேற்கண்ட காரினை விடுவிப்பதற்கும் ரூ.20,000/- தர வேண்டும் என்று தெரிவித்தார். அதற்கு நாங்கள் அவ்வளவு பணத்திற்கு எங்கு செல்வது எங்களிடம் பணம் இல்லை என்று தெரிவித்தோம். அதற்கு ஆய்வாளர் என்னை ரிமாண்ட்டு செய்துவிடுகிறேன் பெய்ல் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறி நாளை காலை அவர் கேட்ட பணத்துடன் வந்து என்னை பாருங்கள் என்று கூறி அனுப்பிவிட்டார். அதன்பின்பு மீண்டும் நேற்று 03.03.2021-ந்தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் நானும் என் தம்பியும் ஓட்டேரி காவல் நிலையம் சென்று ஆய்வாளர் திரு.குமார் அவர்களை பார்த்து அவர் கேட்ட ரூ.20,000/-ஐ தயார் செய்ய முடியாத சூழ்நிலையையும், எங்களுடைய இயலாமையை கூறியும் கடந்த ஒரு வருடமாக கோரோனா காலத்தில் வாகனம் ஓடாமல் ஏற்கனவே மிகுந்த சிரமத்தில் இருப்பதையும் கூறியும் காரை ஓட்டுவதில் வரும் வருமானத்தை வைத்து தான் குடும்பத்தை நடத்துவதாகவும் தெரிவித்து

**Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.04/AC/2021/KM, U/s** 7 of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 **continues . . .)**

மேற்படி என் வாகனத்தை விடுவிக்குமாறு கேட்டதற்கு ஆய்வாளர் அவர்கள் ரூ.20,000/- தயார் செய்ய முடியவில்லை என்றால் இறுதியாக ரூ.10,000/- கொண்டுவந்து கொடுத்தால் தான் தன்னை பெயிலில் விட்டு, தன்னுடைய காரையும் விடுவிப்பதாக கறாராக கூறிவிட்டார். அதன்பிறகு எனக்கு என்ன செய்வது என்று புரியாமல் என் மனைவி மற்றும் எங்களுடைய தாம்பரம் உரிமைகுரல் ஓட்டுநர் தொழிற்சங்க நண்பர்களிடம் தெரிவித்தபோது அவர்கள் மேற்படி ஆய்வாளருக்கு லஞ்சப்பணம் எதுவும் கொடுக்கவேண்டாம். லஞ்சப்பணம் கேட்கும் ஓட்டேரி காவல் நிலைய ஆய்வாளர் திரு.குமார் என்பவர் மீது காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் புகார் கொடுத்தால் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிவித்தனர். அதன்படி என்னுடைய வாகனத்தை விடுவிக்க மேற்படி காவல் ஆய்வாளருக்கு லஞ்சப்பணம் கொடுக்க எனக்கும் விருப்பம் இல்லாததால் ரூ.10,000/- லஞ்சப்பணம் கேட்கும் ஓட்டேரி காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.குமார் என்பவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்த புகார் மனுவை அளிக்கின்றேன். மேலும் தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம் xxx A.உமர்சலீம்) Dt:04-03-2021.

Honoured Madam,

Received the above complaint on 04.03.2021 at 15.00 hrs and after getting proper permission from the higher officers on this complaint, a Discreet Enquiry was conducted. Based on the outcome of the Discreet Enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Kumar, Inspector of Police, Otteri Police Station, Chengalpattu District. Hence, I registered a case in Kanchipuram V&AC, Cr.No.4/AC/2021/KM u/s 7 of the Prevention of Corruption Act 1988 as Amendment in 2018 on 04.03.2021 at 16.00 hrs. The original FIR along with complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Chengalpattu. Copies send to Officers concerned and took-up further action.

G.A. [signature] 4/3/2021
(G. ANNADURAI)
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Kanchipuram-631501